நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**C.C. No.95/2022**

**P.W. 8 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | விக்னேஷ்வரன் |
| தந்தை / கணவர் பெயர் | : | ஜெயராமன் |
| கிராமம் | : | 78, ராஜாஜீ ரோடு |
| வட்டம் | : | சேலம் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 8** |
| வயது | : | 39 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், ஜுலை மாதம், 22–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 11.50AM)

1. நான் தற்போது அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவமனையில் இதய அறுவை சிகிச்சை பிரிவு இணை பேராசிரியராக பணி புரிந்து வருகிறேன். இந்த வழக்கில் மேற்படி மருத்துவமனையின் குடிமை மருத்துவ அலுவலர் அவர்களுக்கு வந்த அழைப்பாணையின் பேரிலும், அவருடைய உத்தரவின் பேரிலும், இந்த வழக்கில்

காயம் அடைந்த சாட்சியான ரவிக்குமார் என்பவர் எங்களது மருத்துவமனையில் 22.03.2022 முதல் 28.03.2022 ந்தேதி வரை உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதிக்கபட்டு இருந்தபோது பராமரிக்கப்பட்ட மருத்துவ ஆவணங்களுடன் இன்று ஆஜராகி மேற்படி மருத்துவ ஆவணங்களின்படி நான் சாட்சியம் அளிக்கிறேன்.

2. தெரிந்த மூன்று நபர்களால் கல்களால் தாக்கப்பட்டதாக மேற்படி ரவிக்குமார் என்பவர் கடந்த 22.03.2022 ம் தேதி மேட்டூர் அரசு மருத்துவமனையில் இருந்து சிகிச்சைக்காக பரிந்துரை செய்யப்பட்டு எங்களது மருத்துவமனையில் மாலை 5.40 மணிக்கு சிகிச்சைக்கு அனுமதிக்கபப்ட்டார். அவரை பரிசோதனை செய்த பார்த்த அவசர சிகிச்சை பிரிவு மருத்துவர் அவருக்கு கீழ்கண்ட காயங்கள் இருப்பதாக சிகிக்சை குறிப்பேட்டில் குறிப்பிட்டுள்ளார்.
    1. இரண்டு கண்களிலும் கன்றிய காயம் காணப்பட்டது.
    2. சிராய்ப்பு காயம் 3X1 செ.மீ அளவில் வலது கண்ணத்தில் காணப்பட்டது.
    3. சிராய்ப்பு காயம் 2X 1 செ.மீ அளவில் வலது கண் இமையில் காணப்பட்டது.
    4. சிராய்ப்பு காயம் 2X 1 செ.மீ அளவில் இடது கண் இமையில் காணப்பட்டது

3. மேலும் சிகிச்சையின் போது சிடி ஸ்கேன் எடுத்து பார்த்ததில் வலது பக்க விலா எலும்புகள் 6 முதல் 11 வரையிலான எலும்புகள் முறிவு ஏற்பட்டு காணப்பட்டது. வலது நுரையீரலில் இரத்தமும் காற்றும் கலந்த நிலையில் இருந்தது. (Hemopnemothorox) மேற்படி பாதிப்பால் நுரையீரலில் உள்ள திரவத்தை வெளியேற்றுவதற்காக துளையிட்டு குழாய் பொருத்தி சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.மேற்படி சொல்லப்பட்ட 1 முதல் 4 வரையிலான வெளிப்புற காயங்கள் சாதரண காயங்கள் ஆகும். மேற்படி வலது பக்க 6 முதல் 11 வரையிலான எலும்பு முறிவு கொடுங்காயம் ஆகும்.
4. ஏற்கனேவே இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டு என்னிடம்காட்டப்படும் அ.சா.ஆ 4 விபத்து பதிவேட்டு அறிக்கையின் பின்புறம் உள்ள காயம் பற்றியான அ.சா.ஆ 5 சான்றிதழில் சான்று அளித்த மருத்துவர் M.ராதாகிருஷ்ணன் தவறாக 1 முதல் 3 வரையிலான காயங்களை கொடுங்காயம் என்று சான்று அளித்து உள்ளார். மேற்படி சான்றிதழில் சேலம் அரசு மருத்துவமனை சார்பாக சான்று

அளித்த சிவா என்பவர் சிகிச்சையின் போது கண்டறியப்பட்ட காயங்களை பற்றி குறிப்பிடமால் பொதுவாக கொடுங்காயம் என குறிப்பிட்டதை வைத்து மேட்டூர் அரசு மருத்துவமனை மருத்துவர் தவறுதலாக விபத்த பதிவேட்டு அறிக்கையில் குறிப்பிட்ட காயங்களை கொடுங்காயங்கள் என்று சான்று அளித்து உள்ளார்.

5. மேற்படி சிகிச்சையின் போது சிடிஸ்கேன் எடுக்கப்பட்டதற்காக அறிக்கையை தாக்கல் செய்கிறேன். ( **22.03.2022ம் தேதியிட்ட சிடிஸ்கேன் அறிக்கை சான்றிட்ட நகல் அ.சா.ஆ 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) மேற்படி சிடிஸ்கேன் மூலம் காயங்களை கண்டறிந்த பிறகு மேற்கண்டவாறு கடந்த 22.03.2022ம் தேதி குழாய் பொருத்தி சிகிச்சை பெற்றதற்கான சிகிச்சை குறிப்பை தாக்கல் செய்கிறேன்.அந்த சிகிச்சை குறிப்புகளின் சான்றிட்ட நகல் அ.சா.ஆ 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது, மேலும் மேறபடி நோயாளி ரவிக்குமார் சிகிச்சைக்கு அனுமதிக்கப்டடது முதல் சிகிச்சை முடிந்து வீடு திரும்பும் வரை பராமரிக்கப்பட்ட முழு சிகிச்சை குறிப்புகள் அடங்கிய கோப்பின் சான்றிட்ட நகல்களை தாக்கல் செய்கிறேன். அது அ.சா.ஆ 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

1. மேற்படி காயம் அடைந்த ரவிக்குமாருக்கு நான் சிகிச்சை அளிக்கவில்லை. அவருக்கு மருத்துவர் சிவசங்கர் என்பவர் தான் சிகிச்சை அளித்தார். தற்போது சிவசங்கர் அரசு பணியில் தான் உள்ளார்.
2. **(நீதிமன்ற கேள்வி: மேற்படி தற்போது எங்கு பணியில் உள்ளார்? பதில்: தற்போது கிண்டி கலைஞர் நூற்றாண்டு மருத்துவமனையில் பணியில் உள்ளார். நீதிமன்ற கேள்வி: உங்களிடம் காட்டப்படும் அ.சா.ஆ 5 காயச் சான்றதழில் சிவசங்கர் என்ற மருத்துவர் காயம் குறித்து சான்று அளித்து உள்ளரா? பதில்: அதில் சிவசங்கர் என்ற மருத்துவர் எந்த வித குறிப்புகளையும் மேற்கொள்ளவில்லை. மாறாக சிகிச்சை குறிப்புகளை பார்த்து அவரது பெயரை முழுமயைாக குறிப்பிடாமல் சிவா என்ற மருத்துவர் சிகிச்சை அளித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.)**
3. நான் இதய அறுவை சிகிச்சை பிரிவில் இணைப் பேராசிரியராக பணி புரிந்து வருகிறேன். அ.சா.ஆ 4 விபத்து பதிவேட்டு அறிக்கையில் உள்ள 4 காயங்களும்

சாதாரண காயங்கள் என்றால் சரிதான். நான் சொன்ன சிடிஸ்கேன் நோயாளி சிகிச்சைக்கு அனுமதிக்கபட்ட அன்றே எடுக்கப்பட்டுள்ளது. சிடிஸ்கேன் எடுத்த அன்று தான் விலா எலும்பில் முறிவு ஏற்பட்டதாக தெரியவந்துள்ளது. அ.சா.ஆ 5 ஆவணத்தில் விலா எலும்பில் ஏற்பட்ட எலும்பு முறிவு குறித்து எந்த விவரங்களும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி காயச் சான்றிதழ் முழுமையான சிகிச்சைக்கு பிறகு தான் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. மருத்துவமனையில் அனுமதிக்கபட்ட பிறகு பாத்ரூம் செல்லும்போது அல்லது ஏதேனும் காரணங்களால் தவறி விழும்போது மேற்படி விலா எலும்பில் எலும்பு முறிவு ஏற்பட வாய்ப்புள்ளதான என்றால் வாய்ப்புள்ளது. நீதின்ற கேள்வி: நீங்கள் கொண்டு வந்த மருத்துவ ஆவணங்களில் மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்ட பிறகு தவறி விழுந்து காயம் ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளதா? பதில்: இல்லை.
5. மருத்துவ ஆவணங்களின்படி சிகிச்சைக்கு அனுமதிக்கபட்ட ரவிக்குமாரை மூன்று தெரிந்த நபர்கள் தாக்கியதாகத்தான் குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்து இரண்டு நாட்கள் கழித்து தான் சிகிச்சைக்கு அனுமதிக்கபட்டுள்ளார் என்றால் சரிதான். ஒரு நபர் குடிபோதையில் இருக்கும் போது இரவு நேரத்தில் தவறி கல் மீது விழுந்தால் கூட மேற்படி விலா எலும்பு முறிவு ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான்.
6. ஒரு நபர் காலையில் மது அருந்தினால் இரவு வரை போதை இருக்குமா என்றால் குடிக்கும் அளவை பொறுத்தும் குடிக்கும் நபரின் உடல் நிலையை பொறுத்தும் அது மாறுபடும். நீதிமன்ற கேள்வி: சிசிக்சைக்கு அனுமதிக்கப்படும் முன்பு எவ்வளவு நேரம் அல்லது நாள் முன்பாக மேற்படி விலா எலும்பு முறிவு ஏற்பட்டு இருக்கும் என்று உங்களால் சொல்ல முடியுமா? பதில்: என்னால் சொல்ல முடியாது.
7. நீதிமன்ற கேள்வி:மேற்படி காயத்தின் தன்மையை பொறுத்து இரண்டு நாட்கள் மருத்துவ சிகிச்சை ஏதும் இல்லாமல் மேற்படி நபரால் இருந்திருக்க முடியுமா? பதில்: இருக்க முடியும்.
8. விலா எலும்பு முறிவு ஏற்பட்ட நபர் சாதரணமாக நடந்தே சிகிச்சைக்கு வரலாம். இரவு நேரத்தில் நீடித்த போதையில் ஒரு நபர் கீழே விழுந்து மறுநாள் காலை

எழுந்திருக்கும்போது அவருக்கு ஞாபக மறதி ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் அவர் அருந்திய இருந்த மதுவின் அளவை பொறுத்தும் அவரின் உடல் நிலையை பொறுத்தும் மாறுபடும்.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–12.45PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/– நா. கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**